**JUDICIAL MAGISTRATE COURT NO.II CHENGALPATTU**

**CC No.453/2024**

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

| | |
|---|---|
| IN THE COURT OF | : JUDICIAL MAGISTRATE NO.II CHENGALPATTU. |
| Deposition of witness for | : Lw2/Pw3 |
| Name | : Kanniga |
| Father/Husband's Name | : Duraisamy |
| Village | :Mahendira City |
| Taluk | : Chengalpattu |
| Calling | : |
| Age | : 39 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 01.07.2026.

**முதல் விசாரணை:**

நான் கூலி வேலை செய்து வருகிறேன். கடந்த 2 வருடங்களுக்கு முன்பு 7.30 மணி அளவில் எனது மைத்துனன் எனது கணவரை பாத்ரூமில் வைத்து கட்டையால் அடித்தார், எனது கணவர் மயங்கி விழுந்து விட்டார். அதன் பிறகு என்னையும் எனது கணவரையும் காலி செய்து விடுவேன் என்று மிரட்டினார். அதன் பிறகு எனது கணவரை செங்கல்பட்டு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றேன். எனது கணவருக்கு தலையில் காயம் ஏற்பட்டது. சம்பவ சமயத்தில் தேவிடிய பையா என்று அசிங்கமான வார்த்தைகளால் திட்டினார் நாங்கள் மறைமலை நகர் காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தோம். என்னை போலீசார் விசாரித்தார்கள்.

குறுக்கு விசாரணை

**1.** எதிரி தில்லி எனது கணவரின் உடன் பிறந்த சகோதரர் என்றால் சரிதான். எனது மாமனார் இறந்து விட்டார். அவரது சொந்த ஊர் உமையாள் பரமசேரி என்றால் சரிதான். உமையாள் பர்மிசேரி கிராமத்தில் எங்களுக்கு சொந்தமாக வீடு உள்ளது என்றால் சரிதான். எதிரி டில்லிக்கு அந்த கிராமத்தில் சொந்தமாக வீடு உள்ளது என்றால் சரிதான். சம்பவம் சம்பவ சமயத்தில் பாத்ரூமில் வைத்து அடுத்ததாக சொல்லப்படும் சம்பவம் பற்றி எனது கணவருக்கு தெரியும் என்றால் சரிதான். காவல் நிலையத்தில் புகார் கொடுத்த விவரமும் எனக்கு கணவருக்கு தெரியும் என்றால் சரிதான்.

2. மறைமலை நகர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்த பிறகு வேறு காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேனா என்றால் இல்லை. நான் கூலி வேலை செய்து வருகிறேன். நாங்கள் பகத்சிங் நகரில் குடியிருக்கும் வீடு எங்களை சொந்த வீடா என்றால் அது எனது மாமனார் வீடு அதை என் பெயரில் எனது மாமனார் எழுதிக் கொடுத்து விட்டார். எந்த வருடம் எழுதிக் கொடுத்தார் என்றால் வருடம் ஞாபகம் இல்லை. எனது மாமனார் 2015 ஆம் ஆண்டு இறந்துவிட்டார். இதற்கு முன்பு எதிரி டில்லி மீது புகார் ஏதேனும் கொடுக்கப்பட்டதா என்றால் இல்லை. எதிரி டில்லி எங்கள் மீது புகார் ஏதேனும் கொடுத்திருக்கிறாரா என்றால் அதைப் பற்றி எனக்கு தெரியாது. எங்கள் மீது எதிரி டில்லி கொடுத்த புகாரை பற்றி எனது கணவர் சாட்சி படைத்திருக்கிறார் என்றால் அதை பற்றி அவருக்கு தான் தெரியும்.

3. பகத்சிங் நகரில் குடியிருக்கும் வீட்டில் மட்டும் நான்கு குடியிருப்பு உள்ளது என்றால் சரிதான். அதில் இரண்டு வீடுகளில் நாங்கள் குடியிருக்கிறோம். மற்ற இரண்டு வீடுகளில் வாடகை விட்டு இருக்கிறோம் என்றால் இல்லை பூட்டி தான் உள்ளது. சம்பவ சமயத்திலும் பூட்டிதான் இருந்தது. நாங்கள் குடியிருக்கும் வீடு எனது மாமனாருக்கு சொந்தமான வீடு என்பதால் அதில் எல்லா வாரிசுகளுக்கும் உரிமை இருப்பதாலும் அதில் எதிரி டில்லி தங்கி இருப்பதால் அவரை அங்கிருந்து விரட்டுவதற்காக அவர் மீது பொய்யான புகார் கொடுத்திருக்கிறோம் என்றால் சரியல்ல. புகார் கொடுத்த பிறகு எதிரி அந்த வீட்டை காலி செய்துவிட்டு வேறு வீட்டுக்கு சென்று விட்டார் என்றால் சரிதான்.

4. அதன் பிறகு அந்த வீட்டு பக்கம் அவர் வருவதில்லை என்றால் சரிதான். எங்களுக்கும் எதிரிக்கும் சொத்து பிரச்சனை இருக்கிறதா என்றால் எனக்கு தெரியாது எனக்கு கணவருக்கு தான் தெரியும். எனது கணவர் மீது வழக்கு ஏதேனும் உள்ளதா என்றால் அதைப் பற்றி எனக்கு தெரியாது. எதிரியும் அவரது மனைவியும் அந்த வீட்டில் குடியிருப்பது எனக்கு பிடிக்காததால் நான் அவர்களுக்கு தொந்தரவு கொடுத்து அவர்களை வீட்டை விட்டு காலி செய்ய வைப்பதற்காக அவர்கள் மீது கொடுத்த பொய்யான புகார் என்றால் சரியல்ல. எனது கணவர் அவருடைய வேலைக்கு காலை 7.30 மணிக்கு கிளம்பி சென்றுவிடுவார். இரவு 10 லிருந்து 11 மணி அளவில் வீட்டுக்கு வருவார். எதிரி எத்தனை மணிக்கு வேலைக்கு செல்வார் என்று எனக்கு தெரியுமா என்றால்

தெரியாது. எதிரி வீட்டை காலி செய்ய வேண்டும் என்பதற்காக கொடுக்கப்பட்ட பொய்யான புகார் என்றாலும் எதிரிக்கும் இந்த வழக்குக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றாலும் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை

Typewritten to my dictation in open court read over to the witness in Tamil in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd/-.S.Sahaana
Judicial Magistrate No.II,
Chengalpattu